| சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம் | |
|---|---|
| நாள் | 02.04.2025 |
| O.S. No. | 157/2004 |
| பி.சா.2 | கண்ணகி |

2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02-ம் நாள் கண்ணகி என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

பெயர் : கண்ணகி சமயம் :

தந்தை பெயர் : தொழில் :

கிராமம் : வயது :

தாலூக்கா :

குறுக்கு விசாரணை –

(சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது)

1. எனது தகப்பனாரான 9ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையைத்தான் நான் எனது எதிர்வழக்குரையாக ஏற்றுக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். மேற்படி எதிர்வழக்குரையில் பத்தி 8ல் எதிரிடை அனுபவம் உள்ளதாக எனது அப்பா கூறியுள்ளார் என்றால் சரிதான். நான் இவ்வழக்கை எதிரிடை அனுபவத்தின் மூலம் சொத்து பாத்தியம் என்று இவ்வழக்கு நடத்துகிறேனா அல்லது உயில் மூலம் சொத்து பாத்தியம் என இவ்வழக்கை நடத்துகிறேனா என்றால் உயில் மூலம் பாத்தியம் என வழக்கை நடத்துகிறேன்.
2. இவ்வழக்கானது, பினாமி நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக எதிர்வழக்குரையில் கூறியுள்ளோம் என்றால் சரிதான். அ.வ.எண்.321/1991 என்ற வழக்கில் உயில் செல்லாது என்றும், அவரவர்கள் தங்களது பாகத்தை பொறுத்து பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது, ஆனால் உயில் செல்லும்.

3. மேற்படி முந்தைய வழக்கின் தீர்ப்பு எங்களை கட்டுப்படுத்தாது என்பதை காட்டுவதற்காக நாங்கள் மேல் நடவடிக்கை எதாவது எடுத்தோமா என்றால் இல்லை, உயிலை ஒப்புக்கொண்டு, வாதியே சொத்தை கிரையம் கொடுத்துள்ளதால் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. அ.வ.எண். 143/1987 என்ற வழக்கானது, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதில் உயிலைப்பற்றி தீர்மாணிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்படி வழக்கின் தீர்ப்பை எதிர்த்து, மே.மு.வ.எண்.73/1989 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.
4. அ.வ.எண்.321/1991 என்ற வழக்கில் எனது தகப்பனார் 3ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி வழக்கில் அண்ணாமலை முதலியாரின் வாரிசுதாரர்கள் தரப்பினராக உள்ளார்கள் என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)**